இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள 1981 இன் 74 ஆம் இலக்க பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 11 இன் 12 முதல் 19 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பரிமாற்றத்திற்கு உட்படாத பரிவர்த்தனைகளில் இருந்து எழுகின்ற வருமான செலவினங்கள் நிபந்தனைகள்/விதிகள் அல்லது வரையறைகளை இனங்கண்டு கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டினுள் ரூபா 3,636,091 மற்றும் கடந்த ஆண்டில் கிடைத்த ரூபா 4,209,053 தொகையான அரச மானியங்கள் குறித்த ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கம் செய்வதற்கு பதிலாக செலவிடப்படாத மூலதன மானியமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.	அரச மூலதன மானியங்கள் உரிய மூலதன சொத்துக்களை சுவீகரிப்பதற்கு மாத்திரம் வழங்கப்படுவதுடன், சொத்தொன்றாக இனங்காணக்கூடிய நிபந்தனைகளை பூர்த்தி செய்திராத சந்தர்ப்பத்தில் செலவிடப்படாத மூலதன மானியங்கள் வருமானச் செலவினமாக அடையாளம் காண முடியாது என்பது.	நியமத்திற்கு இணங்க செயல்பட வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆம் ஆண்டின் போது பட்டமளிப்பு மேலாங்கிகளுக்கு ரூபா 523,267 தொகையான பெறுமானத் தேய்வு ஒதுக்கம் கூடுதலாக சீராக்கப் செய்யப்பட்டிருந்த காரணத்தால் பட்டமளிப்பு மேலாங்கிகளை வழங்கும் போது ஏற்பட்ட மீள்மதிப்பீட்டு மிகையின் அதிகரிப்பினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தால் திரண்ட மிகை மற்றும் மீள் மதிப்பீட்டு இலாபம் அந்த அளவினால் முறையே அதிகரித்து மற்றும் குறைத்து நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2022 ஆம் ஆண்டின் போது தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,062,500 தொகையான முற்பணம் அந்த ஆண்டின் போது தவறாக சொத்தொன்றாக இனம் காணப்பட்டிருந்தது. அந்த சொத்துக்களின் தொகுதி 2022 திசெம்பர் மீள் மதிப்பீடு செய்யப்படும் போது முற்பண அகற்றல்கள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் மீள் மதிப்பீட்டு மிகை அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 4,743,750 பெறுமதியுடைய தளபாட உபகரணங்களை நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்ளும் போது முற்பணங்கள் கழிக்கப்பட்டு செலுத்தப்பட்ட ரூபா 2,681,250 பெறுமதி மாத்திரம் சொத்தொன்றாக இனங்காணப்பட்ட காரணத்தால் சொத்துக்கள் கணக்கு ரூபா 2,062,500 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	- மேற்படி-

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
1.6.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
நானாவித கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,880,425 தொகையான மீதியினுள் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக மாணவர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,176,625 தொகையான மஹாபொல புலமைப்பரிசில் பணம் உரிய மாணவர்களுக்கு செலுத்துவதற்கு அல்லது பொதுத் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பில் மஹாபொல புலைமை பரிசில் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து தகவல் பெற்றுக் கொள்ளப்பட உள்ளது மற்றும் அதற்கமைய நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பது.	குறித்த மாணவர்களுக்கு துரிதமாக செலுத்துவதற்கு அல்லது பொதுத் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவக் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1997 இன் 26 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதி கோவையின் XXII அத்தியாயத்தின் 18.3 ஆம் உப பிரிவு மற்றும் XXII அத்தியாயத்தின் 20.1 பிரிவு	முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 06 மாதங்களினுள் நிறைவு செய்யப்பட வேண்டியதுடன் ஏதேனும் ஒரு நபரின் பணி வரிதாக்கப்பட்டிருப்பின் அவருக்கு எதிராக நடத்தப்படும் ஒழுக்காற்று விசாரணைகளை தாமதமின்றி நிறைவு செய்ய வேண்டும். எனினும் விரிவுரையாளர் தேரர் ஒருவருக்கு எதிராக குற்ற பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் ஒழுக்காற்று விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு, ஒழுக்காற்று கட்டளைகளை வழங்குவதற்கு பல்கலைக்கழகம் தவறி இருந்தது. ஒழுக்காற்று விசாரணை இடம்பெறும்	ஆரம்ப விசாரணைகள் 2025 பெப்ரவரி 25 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டு அந்த அறிக்கை பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையில் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		சந்தர்ப்பத்தில் ஒழுக்காற்று அதிகாரியின் இணக்கப்பாடு இல்லாது அவருக்கு நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதி வழங்கப்பட கூடாத போதிலும் தற்காலிக சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த இந்த தேரர் 16 நாட்கள் ஒழுக்காற்று அதிகாரியின் அங்கீகாரம் இன்றி நாட்டிலிருந்து வெளியேறி இருந்தார்.		
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவையில் 570, 571(1) மற்றும் (2) ஆம் பந்திகள்	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன் கொண்டு வரப்படும் ரூபா 5,894,610 தொகையான விடுதி மற்றும் வாசிகசாலை வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கோரிக்கை விடுக்கப்படாத வைப்புக்கள் தொடர்பில் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் வருமானத்திற்கு எடுப்பதற்கு திட்டமிட்டப்பட்டுள்ளது என்பது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 7.1.4 மற்றும் 7.1.5 ஆம் பந்திகள்	பட்டப்பின் படிப்பு பாடநெறிகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் மதியுரை சேவைகளின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ரூபா 3,041,003 தொகையானது முறையான அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது மகோபாத்தியாய நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.	1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் சட்டத்தின் பிரிவு இலக்கம் 17 இன் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்கு நிதியம் அளித்தல், நிர்வாக மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றுக்கு அதிகாரம் கொண்டுள்ளதாக மற்றும் அதற்கமைய உரிய காலப்பகுதிகளில் கட்டுப்பாட்டு சபையின் அடிப்படையில் அந்த நிதியம் நிறுவப்பட்டுள்ளது என்பது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஈ)	2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2014 இன் 04(ii) ஆம் பந்தி	ஆராய்ச்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாத காலப்பகுதியினுள் அதன் முன்மொழிவுக்கு உரிய செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் செயல் முன்னேற்றம் உள்ளடக்கப்பட்ட உள்ளக ஆராய்ச்சி அறிக்கையினை வழங்கியிராத 54 பேராசிரியர்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 21,430,312 தொகையான ஆராய்ச்சி படிகள் செலுத்தப்பட்டிருந்தன.	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் முறையே நான்கு கூட்ட தடவைகள் மற்றும் ஐந்து கல்விசார் ஆராய்ச்சி குழு கூட்டங்கள் கூட்டப்பட்டு ஆராய்ச்சிகளின் செயல் முன்னேற்றம் கலந்துரையாடப்பட்டுள்ள துடன், அதன் போது ஒவ்வொரு ஆராய்ச்சியையும் முன்னோக்கி நகர்த்துவதற்கு போதிய முன்னேற்றம் ஒன்று காணப்படுவது குறித்து திருப்தியடைந்துள்ளமை.	-மேற்படி-
(உ)	2019 நவம்பர் 25 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிறுவன சுற்றறிக்கை 9/2019 இன் 1(i) ஆம் பந்தி	பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான வீடு ஒன்றை வாடகைக்கு வழங்கும் போது அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதம் குறைத்துக் கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டுள்ள வீடுகளுக்கு வாடகை அறவிடும் போது கல்விசார், கல்வி சாரா பதவியணியின் உத்தியோகத்தர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூபா 1,000 ஆன தொகை மற்றும் இடைநிலை ஊழியர்களிடமிருந்து ரூபா 800 ஆன தொகையும் அறவிடப்பட்டிருந்தது.	பேராசிரியர்களின் வீடுகளின் இடவசதி மிகவும் குறைவாக காணப்பட்டதால் சம்பளத்திலிருந்து 10 சதவீதம் அறவிடுவதற்கு உரிய வசதிகள் அதில் இல்லை என்பதால் மற்றும் அலகொன்றுக்காக அறவிடப்படும் ரூபா 1,000 தொகைக்கு மேலதிகமாக நீர் மற்றும் மின்சார மானிகள் தனித்தனியாக பொருத்தப்பட்டு பயன்படுத்தப்படும் அளவிற்கு மாதாந்த சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்றமை மற்றும் பழமையான சில கட்டிடங்கள் பழுது பார்க்கப்பட்டு அவற்றை இடைநிலை ஊழியர்களுக்கு வழங்கி நீர் மற்றும் மின்சாரத்திற்கு மாத்திரம் ஒருவரிடம் இருந்து ரூபா 800 ஆன தொகை அறவிடப்படுவதை போன்று இந்த கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பெறுமதிகள் அங்கு வதியும் பேராசிரியர்களின் மற்றும் இடைநிலை ஊழியர்களின்	-மேற்படி-

		எண்ணிக்கைக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 40,594,825 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,519,743 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 43,114,568 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீண்டெழும் செலவினங்கள் ரூபா 38,493,006 இனால் அதிகரித்தமை மற்றும் பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 28,320,757 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

2.2 பிதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கடந்த வருடத்தில் ரூபா 651,850,054 தொகையான ஒட்டு மொத்த வருமானம் மீளாய்வாண்டில் ரூபா 675,549,248 வரையிலும் 3.63 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. கடந்த வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தில் ஈட்டப்பட்ட வருமானம் முறையே ரூபா 136,980,700 மற்றும் ரூபா 124,736,179 ஆனமையால் கடந்த வருடத்திற்கு ஒப்பாக ஈட்டப்பட்ட வருமானம் மீளாய்வாண்டில் ரூபா 12,244,527 அல்லது 8.94 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

கடந்த வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த செலவினம் முறையே ரூபா 560,193,311 மற்றும் ரூபா 598,686,317 ஆனமையால் கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் 6.87 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் ஆகியவை முறையே 1.33:1 மற்றும் 1.25:1 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அந்த விகிதம் முறையே 1.12:1 மற்றும் 1.04:1 ஆக காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ) 2023 ஆம் ஆண்டின் போது ஆராய்ச்சி படிகளை பெற்றுக்கொண்ட 43 உத்தியோகத்தர்கள் இறுதி ஆராய்ச்சி அறிக்கைகளை வெளியிடுவதற்கு 3 முதல் 10 மாதங்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. 42 ஆராய்ச்சியாளர்களால் 2023 ஆம் ஆண்டின் போது ஆராய்ச்சி குழுவின் அங்கீகாரத்துடன் ஒரு வருட காலத்தில் நிறைவு செய்வதற்கு	2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஆராய்ச்சி காலம் நிறைவடைந்த அனைத்து உத்தியோகத்தர்களும் தற்போது இறுதி அறிக்கைகளை வழங்கியுள்ளனர் என்பது.	ஆராய்ச்சி அறிக்கைகள் உரிய காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சி படிகள் செலுத்தாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	இணக்கப்பாட்டுடன் ரூபா 17,944,759 தொகையான ஆராய்ச்சிகளை நிறைவு செய்திராத போது மீளாய்வாண்டினுள் அந்த உத்தியோகத்தர்களுக்கு புதிய ஆராய்ச்சி முன்மொழிவுகளுக்காக ரூபா 17,017,306 தொகையான ஆராய்ச்சி படிகள் செலுத்தப்பட்டிருந்தன.		
(ஆ)	பட்டப்பின் படிப்பு மற்றும் வெளிவாரி பரீட்சைகள் கல்வி நிலையத்தின் மூலம் நடாத்தப்படும் ஆங்கில டிப்ளமோ பரீட்சையில் 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் வாய்மொழி மூலம் மற்றும் செவிப்புல (EDSL 05) வினாத்தாளுக்காக 2018 ஆம் ஆண்டில் தோற்றி பரீட்சையில் தோல்வியடைந்த விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை வழங்காதிருந்த சந்தர்ப்பத்தில் மற்றும் வினாத்தாளுக்கு தோற்றியுள்ள போது எடுக்கப்படும் வருகை பதிவேட்டில் உரிய இடத்தில் ‘‘சமூகமளிக்கவில்லை” என பரீட்சை மண்டப அதிகாரியால் குறிப்பிடப்பட்டுள்ளபோது குறித்த விண்ணப்பதாரிக்காக இந்த பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக போலியான சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டிருந்தது.	இந்த விண்ணப்பதாரி 2018 ஆம் ஆண்டில் வாய்மொழி மூலம் மற்றும் செவிப்புல (EDSL 05) பரீட்சைக்கு தோற்றியிருக்கவில்லை என்பது மற்றும் 2019 ஆம் ஆண்டில் அதில் 12 புள்ளிகளை பெற்று தோல்வியடைந்துள்ளமை மற்றும் அந்த வினாத்தாளுக்கு எடுக்கப்பட்ட வருகை பதிவேட்டில் உரிய இடத்தில் ‘‘சமூகமளிக்கவில்லை’’ என பரீட்சை மண்டப அதிகாரியால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த வருகை பதிவேட்டிலேயே மேல் மூலையில் குறித்த விண்ணப்பதாரி கையொப்பமிட்டு இருந்தார்.	பாடநெறிகளுக்கு இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களின் தகைமைகளை மீளாய்வு செய்து, இணைத்துக் கொள்வதை வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் தமிழ் மொழி மூலம் உயர் சான்றிதழ் பத்திர பாடநெறி, தமிழ் மொழி டிப்ளோமா, ஆங்கில உயர் டிப்ளோமா பாடநெறி மற்றும் ஆங்கில சான்றிதழ் பத்திர பாடநெறி ஆகிய பாடநெறிகளுக்காக பத்திரிக்கை அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விடவும் குறைவான தலைமைகளை கொண்ட மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந் தனர்.	தமிழ் மொழி மூல நேர்முகப் பரீட்சையில் பேச்சுத் திறமைகள் மற்றும் அறிவினை அடிப்படையாகக் கொண்டு தரப்படுத்தும் பரீட்சையில் 70 புள்ளிகளை விட குறைவான போதிலும் அந்த மாணவர்கள் மற்றும் ஆங்கில உயர் டிப்ளோமா பாடினிற்காக ஏனைய நிறுவனங்களின் டிப்ளோமா சான்றிதழ்கள் காணப்பட்டமையால் மற்றும் நேர்முகப் பரீட்சையில் வாய்மொழி மூலம் திறமைகளை காண்பித்த	பாடநெறிகளுக்கு இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களின் தகைமைகளை மீளாய்வு செய்து, இணைத்துக் கொள்வதை வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		மாணவர்களுக்கும் பாடநெறியை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு பதிவு செய்துள்ளமை மற்றும் ஆங்கில சான்றிதழ் பத்திர பாடநெறிக்கு போதிய எண்ணிக்கையான மாணவர்கள் காணப்படவில்லை என்பது.	

3.2 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பரீட்சைகள் அலகிற்காக ஐந்து மாடி கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக 2019 ஒக்தோபர் 17 ஆம் திகதி ரூபா 252,327,545 தொகையான (வட் வரி நீங்கலாக) பெறுமதிக்கு தனியார் ஒப்பந்ததார நிறுவனம் ஒன்றுடன் பல்கலைக்கழகம் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்ததுடன், நிர்மாணங்கள் ஒரு வருடத்தினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது. நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பில் அங்கீகாரங்களை பெற்றுக் கொள்வதற்கு கருத்தில் கொள்ளக்கூடிய அளவிலான காலம் எடுக்கப்பட்டமை மற்றும் முன்னர் நிலவிய பாதகமான பொருளாதார நிலைமைகள் காரணமாக ஒப்பந்ததாரரால் கட்டிடத்தின் நிர்மாண பணிகளை ஆரம்பிக்காத காரணத்தால் 2022 ஜூலை 01 ஆம் திகதி உடன்படிக்கையை நிறைவு செய்வதற்கு கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்திருந்தது. அதற்கமைய உடன்படிக்கை நிறைவு செய்யப்படும் சந்தர்ப்பம் வரையிலும் ஆரம்ப பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 11,725,461 தொகையான செலவினம் விளைவற்ற செலவினமாக மாறி இருந்தது.	குறித்த செயற்திட்டத்தின் கட்டுமானங்களுக்கு உரிய பணிகள் தற்போது இடம்பெறுகின்ற காரணத்தால் அந்த செலவினம் விளைவற்ற செலவினம் அல்ல என்பது மற்றும் 2025 பெப்ரவரி 03 திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது குறித்த கட்டிடத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் குறித்த பெறுகை நடவடிக்கைகள் மற்றும் விலைக்கேள்வி மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளமை.	உத்தேச கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டும்.
(ஆ)	(i) 200 வெளிநாட்டு மாணவர்களுக்காக விடுதி வசதிகளை வழங்குவதற்காக	2024 ஜனவரி 23 ஆம் திகதி கல்வி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு மற்றும்	இந்தக் கட்டிடத்தில் கட்டுமான

	மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 190,135,000 கொண்ட (வட் வரி நீங்கலாக) விடுதி கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக 2019 அக்தோபர் 11 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திரப்பட்டிருந்ததுடன், இரு சந்தர்ப்பங்களில் உடன்படிக்கை நீடிக்கப்பட்ட பின்னர் 2022 ஆகஸ்ட் 30 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது. 2022 மே மாதம் வரையிலும் அந்தக் கட்டிடத்திற்காக ரூபா 148,336,250 செலவிடப்பட்டு பௌதீக செயன்முன்னேற்றம் 75 சதவீதம் மாத்திரமாக உள்ள போது கட்டுமான பணிகள் இடை நடுவே கைவிடப்பட்டிருந்ததுடன் இந்த கட்டுமானங்களுக்காக 2019 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட எஞ்சிய தொகையிலிருந்து கட்டிடத்தில் மூன்றாவது தளத்தில் பணிகள் 2025 ஜுலை 15 ஆம் திகதி அளவில் நிறைவு செய்வதற்காக ரூபா 40,540,977+ (வட்) பெறுமதிக்கு ஒப்பந்ததாரர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2025 ஜுலை அளவில் இந்த கட்டிடத்தினை முழுமையாக நிர்மாணித்திருந்த போதிலும் எந்த ஒரு மாணவருக்கும் விடுதி வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அறிவுரைகளுக்கு இணங்க இந்த கட்டிடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் எஞ்சிய நிதியேற்பாட்டில் ஏனைய கட்டுமான பணிகளை கட்டம் கட்டமாக பெறுகை நடைமுறைக்கு இணங்க செயல்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் அதற்கு அமைய மூன்றாவது தளம் 2024 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு, அதன் பணிகள் இறுதிக்கட்டத்தில் காணப்படுவதாகவும் 2025 மே மாதத்தின் இறுதி அளவில் மூன்றாம் தளத்தின் கட்டுமான பணிகள் நிறைவு செய்யப்படும் என்பது. அவ்வாறே செயற்திட்டத்தின் எஞ்சிய பணிகள் 2025 பெப்ரவரி 03 ஆம் திகதி இடம் பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் அதற்கமைய செயற்திட்டத்தின் எஞ்சிய பணிகளுக்கு உரிய பெறுகை நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றவாறு உள்ளன.	பணிகளை நிறைவு செய்வதற்கு மற்றும் மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	வெளிநாட்டு மாணவர்களை இலக்காக கொண்டு உயர் கிரயத்தின் கீழ் இவ்வாறான செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பல்கலைக்கழகத்திற்கு வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு போதிய மட்டத்திற்கு அதனை அபிவிருத்தி செய்வதற்கு உரிய மேம்படுத்தல்	பல்கலைக்கழகத்தின் நான்கு வருடங்களிலும் 80 வெளிநாட்டு மாணவர்கள் உள்ளமை மற்றும் 2024/2025 கல்வியாண்டுக்காக மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான அறிவித்தல்கள் மின்னஞ்சல் ஊடாக தூதரகங்களுக்கு 2024 அக்தோபர் 02 ஆம் திகதி அனுப்புவதற்கு	வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக் கொள்வதனை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

	நடவடிக்கைகள் போதிய அளவில் இடம்பெறாத காரணத்தால் 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் (பொது/ விசேட) பட்டங்களுக்காக முறையே 18, 15, 36 மற்றும் 07 வெளிநாட்டு மாணவர்கள் மாத்திரம் இணைத்துக்கொள்ள இயலுமானதாக இருந்தது.	நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது.	
(இ)	ஆத்தர் சி கிளார்க் மத்திய நிலையத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 3,000,000 கிரயமுடைய கணக்கீட்டு மென்பொருள் கட்டமைப்பு தொடர்பான செயற்திட்டத்திற்காக 2022 திசெம்பர் 01 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு 08 மொடியுல்களின் நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி, நிறுவுதல் மற்றும் பரிசோதனை, கட்டமைப்பினை ஆரம்பித்தல் மற்றும் பயிற்சிக்காக 08 மாத காலம் ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் அந்தக் காலப்பகுதி நிறைவடைந்து சுமார் 17 மாத காலம் கடந்திருந்த போதிலும் அவற்றுள் 06 மொடியுல்கள் நிறைவு செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சம்பள மொடியுல் அபிவிருத்தி செய்யப்பட்டு தற்போது Parallel Run இடம்பெற்றவாறு உள்ளது மற்றும் கடன்பட்டோர், கடன் கொடுத்தோர், களஞ்சியம்/நிலையான சொத்துக்கள், முதலீடு மற்றும் நிதிய முகாமைத்துவம் மற்றும் பாதீடு மற்றும் கண்காணிப்பு போன்ற மொடியுல்களின் பணிகளை நிறைவு செய்யும் கால சட்டகத்தினை மென்பொருளை அபிவிருத்தி செய்யும் நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.	கணக்கீட்டு மென்பொருள் கட்டமைப்பினை உரிய முறையில் அபிவிருத்தி செய்து உத்தேச நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
மீளாய்வாண்டின் இறுதி அளவில் கல்விசார் பதவியணியின் 23 பதவி வெற்றிடங்கள் நிலவிய காரணத்தால் பல்கலைக்கழகத்தினால் வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டு மீளாய்வாண்டினுள் மாத்திரம் வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு கொடுப்பனவுகளுக்காக ரூபா 11,296,791 செலவிடப்பட்டிருந்தது.	வெற்றிடங்கள் நிலவும் பதவிகளுக்கு கல்வி சார் பதவியினரை இணைத்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமையால் வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவையினை பெற்றுக்கொள்வதை எதிர்காலத்தில் மேலும் குறைத்துக் கொள்ள முடியும் என்பது.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு பல்கலைக்கழகம் மேற்கொள்ளும் கிரயத்தினை குறைப்பதற்கு

அந்த செலவினம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக 73.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மொழி கற்கைகள் பீடத்தில் விரிவுரை மணித்தியாலங்களில் 44 சதவீதமும் பௌத்த கற்கைகள் பீடத்தின் விரிவுரை மணித்தியாலங்களில் 44 சதவீதமும் வெளிவாரி விரிவுரையாளர்களால மேற்கொள்ளப்பட்டிருந்தது.		நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

4.1 ஆண்டறிக்கை

		கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	(i)	2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டிக் கோவையின் 2.4 இன் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு கட்டுப்பாட்டுச் சபை அங்கத்தவர்கள் தொடர்பிலும் விடயங்கள் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கையில் அந்த விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இது 2024 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின் வரைபு என்பதால் கட்டுப்பாட்டு சபையின் அங்கத்தவர்களின் பெயர் மற்றும் உரிய பதவிகளை உள்ளடக்கி இருந்த போதிலும் முழுமையான விபரங்களை கொண்டமைந்த கட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்களின் தகவல்கள் முன்மொழிகளிலும் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள முழுமையான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்படும் என்பது.	சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்பட வேண்டும்.
	(ii)	ஆண்டறிக்கையை தயாரிக்கும் போது நிறுவனத்திற்கு வழிகாட்டி ஒன்றாக பின்னிணைப்பு iii மேற்படி சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆண்டறிக்கை குறித்த மாதிரிக்கமைய சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த மாதிரியில் குறிப்பிடப்பட்டவாறு குறித்த அறிக்கைகள் முன்மொழிகளிலும் தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள முழுமையான ஆண்டறிக்கையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	- மேற்படி-